**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075247

C

1. District மாவட்டம் : சேலம்  PS காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு  Year ஆண்டு : 2022  FIR No. மு.த.அ. எண் : 12/AC/2022  Date நாள் : 15/9/2022

2. (i) Act சட்டம்: Prevention Of Corruption  Sections பிரிவுகள்: 7(A) and 7(a)
(ii) Act சட்டம்: Act 1988 as amended in 2018  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை
5.09.22 at 12.00 hrs at A2 office
10.9.22 at 11-30 hrs at A2 office
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை 13.9.22 at 07.00 h near Arunai Temple
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15/9/2022  Time நேரம் : 06.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  சுமார் 70 கி.மீ. கிழக்கே [illegible] திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் திருவண்ணாமலை.
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. சந்திரசேகரன்.  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M. மெய்யன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்  (g) Address : முகவரி 3/43, [illegible] திருவண்ணாமலை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு. வெங்கடேசன், சர்வேயர் திருவண்ணாமலை வடக்கு [illegible] திருவண்ணாமலை திரு. அண்ணாமலை (கணேசன்)
2) திரு சின்னையா சர்வேயர் [illegible] திருவண்ணாமலை உதவி இயக்குநர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதமில்லை

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளை இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

15.09.2022 15/9/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

15/09/2022 at 0835 hrs.

Name: பெயர் ..........
Rank: நிலை ..........

<u>சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 12/AC/2022 u/s 7(A) and 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.</u>

இன்று 15.09.2022 ஆம் தேதி காலை 06.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது, M. செந்தில்குமார், த/பெ. மெய்யன், கதவு எண்.3/143, பாட்டப்பன் கோவில் வீதி, தேவியாக்குறிச்சி அஞ்சல், தலைவாசல் தாலுகா, சேலம் மாவட்டம் என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர் M. செந்தில்குமார், த/பெ. M . மெய்யன், கதவு எண்.3/43, பாட்டப்பன் கோவில் வீதி, தேவியாக்குறிச்சி அஞ்சல், தலைவாசல் தாலுகா, சேலம் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம். அய்யா, நான் எனது குடும்பத்தாருடன் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் சேலம் மாவட்டம், தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் M.P.S.P ராஜ் பிரதர்ஸ் என்டர்பிரைசஸ் என்ற பெயரில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரராக 2017 ஆம் ஆண்டு முதல் அரசு ஒப்பந்த பணிகள் செய்து வருகிறேன். நான் தலைவாசல் ஒன்றியத்திற்குட்பட்ட பட்டுத்துரை, தென்குமரை, தேவியாக்குறிச்சி, சிவசங்கராபுரம் ஆகிய பஞ்சாயத்துகளில் சிமென்ட் காங்கிரீட் ரோடு போடுதல், கழிவு நீர் கால்வாய் அமைத்தல், ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து மின்மோட்டார் பொருத்துதல் போன்ற பணிகளை பஞ்சாயத்தில் ஒப்பந்த அடிப்படையில் செய்து வருகிறேன். நான் தேவியாக்குறிச்சி பஞ்சாயத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தேவியாக்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளி எதிர் புறம் உள்ள எம்.பி. ஆர். டெய்லர் வீடு முதல் கோவிந்தன் வீடு வரை 52 மீட்டர் நீளத்திற்கு கழிவு நீர் கால்வாய் அமைக்க ரூ.2,00,000/– த்திற்கும், கோவிந்தன் வீடு முதல் சுந்தரம் வீடு வரை 52 மீட்டர் நீளத்திற்கு கழிவு நீர் கால்வாய் அமைக்க ரூ.2,00,000/– த்திற்கும் மற்றும் சுந்தரம் வீடு முதல் அங்கன்வாடி மையம் வரை 24 மீட்டர் நீளத்திற்கு கழிவு நீர் கால்வாய் அமைக்க ரூ.1,08,000/– த்திற்கும் ஆக மொத்தம் மூன்று வேலைகளையும் சேர்த்து ரூ.5,08,000/– த்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிகள் செய்து முடித்துள்ளேன். மேற்படி மூன்று வேலைகளுக்கும் உரிய பில் தொகைகள் எனக்கு இது வரை சேங்சன் ஆகாமல் இருந்து வருகிறது. தற்பொழுது தேவியாக்குறிச்சி பஞ்சாயத்து செயலாளராக தேவியாக்குறிச்சியைச் சேர்ந்த திரு. சின்னசாமி என்பவரும், தலைவியாக திருமதி. அமுதா என்பவரும் பணிபுரிந்து வருகின்றனர். பஞ்சாயத்து தலைவி திருமதி. அமுதா அவர்களின் கணவர் திரு. ஜெயக்குமார் தலைவாசல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு

கடன் சங்கத்தில் காசாளராக பணியாற்றி வருகிறார். அவர் தனது மனைவி சார்பாக பஞ்சாயத்து வேலைகள் அனைத்தையும் முன்னின்று கவனித்து வருகிறார். அவரது மனைவி சார்பாக எனக்கும் ஏற்கனவே பஞ்சாயத்து வேலைகள் செய்ய ஏற்பாடு செய்து கொடுத்துள்ளார். நான் ஏற்கனவே செய்து முடித்த வேலைகளுக்குரிய பில் தொகைகளை சேங்சன் செய்ய பலமுறை தேவியாக்குறிச்சி பஞ்சாயத்து அலுவலகம் சென்று செயலர் மற்றும் தலைவி திருமதி. அமுதா அவர்களின் கணவர் திரு. ஜெயக்குமார் ஆகியோரைச் சந்தித்து கேட்டுள்ளேன். அவர்கள் பில் சேங்சன் செய்வதாக கூறினார்கள். ஆனால் சொன்னபடி தொகைகள் எனக்கு சேங்சன் ஆகவில்லை. மீண்டும் நான் கடந்த 5.9.2022 ஆம் தேதி திங்கள்கிழமை பகல் சுமார் 12 மணியளவில் தேவியாக்குறிச்சி·பஞ்சாயத்து அலுவலகம் சென்று அங்கிருந்த பஞ்சாயத்து செயலாளர் திரு. சின்னச்சாமி அவர்களை சந்தித்து எனது ரூ.5,08,000/– க்குரிய நிலுவை பில் பற்றி கேட்டேன். அதற்கு அவர் தான் பில் போட்டு கொடுப்பதாகவும், ஆனால் பஞ்சாயத்து வேலைக்கென தனியாக கொடுக்கவேண்டிய 13% கமிசன் என்னாச்சு, அது பத்தி ஒன்றுமே சொல்லமாட்டேங்கிற என்று என்னிடம் கேட்டார். மேலும் அவரே தொகை கணக்கிட்டு 13% க்கு ரூ.66,040/– வருகிறது என்றும், ரூ.66,000/– த்தை கொடுக்கவேண்டும் என்றும் மேலும் பஞ்சாயத்து தலைவியின் கணவர் திரு. ஜெயக்குமாரும் என்னிடமிருந்து பணத்தை வாங்கிக்கொண்டு பில் தயார் செய்யும்படி சொல்லியுள்ளார் என்றும் கூறினார். அதற்கு நான் தொகை ரொம்ப அதிகமாக இருக்கிறது என்றும், என்னால் அவ்வளவு தொகை கொடுக்க முடியாது என்றும் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுமாறும் கூறினேன். சரி நீயே எவ்வளவு தொகை என்று சொல்லு என்று அவர் என்னிடம் கேட்டார். அதற்கு நான் பதில் எதுவும் கூறாமல் இருந்தேன். அதன் பிறகு கையெழுத்து போடுவது தலைவி அமுதா அவர்கள் வேலை என்றும், தான் பில்லை தயார் செய்து சேங்சன் ஆர்டர் வாங்கி எனது அக்கௌண்டிற்கு பணம் வரும் வரை அனைத்து வேலைகளையும் செய்து முடித்து விடுவதாகவும் கூறினார். மீண்டும் நான் தொகை அதிகமாக உள்ளது பற்றி கேட்டதற்கு அவர் ரூ.66,000/– கொடுக்கவேண்டும் என்றும், பணத்தை முன்னாடியே தருகிறாயா அல்லது பில் பாஸ் செய்த பின்பு தருகிறாயா என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் முதலில் பில் பாஸ் செய்யுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் வேலை எல்லாம் செய்து முடித்து விட்டாய், பார்மாலிட்டீச செஞ்சா உடனே பில் பாஸ் பன்னிடுவோம், தேவையில்லாமல் நீதான் லேட் பன்னிட்டு இருக்க என்றும் ஆரம்பத்திலேயே பணம் கொடுக்க மாட்டேன் என்று சொல்லியிருந்தா உனக்கு பஞ்சாயத்து தலைவியின் கணவர் திரு. ஜெயக்குமார் வேலை கொடுத்திருப்பாரோன்னு கூட சந்தேகமாக இருக்கிறது என்றும் கூறினார். மேலும்

பணத்தை தன்னிடம் கொடுத்தாலும் சரி அல்லது பஞ்சாயத்து தலைவியின் கணவர் திரு. ஜெயக்குமாரிடம் கொடுத்தாலும் சரி என்று கூறினார். அப்போது நான் மீண்டும் தொகை அதிகமாக இருக்கிறது என்று கூறியதற்கு சிறிது யோசித்து விட்டு சரி ரூ.6,000/– த்தை கழித்துக் கொண்டு மீதி ரூ.60,000/– கொடு என்று கூறினார். அதற்கு நான் பார்க்கலாம் என்று கூறிவிட்டு அங்கிருந்து வந்து விட்டேன். பஞ்சாயத்து தலைவி திருமதி. அமுதா பஞ்சாயத்து தொடர்பான வேலைகளை அவரது கணவர் திரு. ஜெயக்குமார் மூலம் கவனித்து வருகிறார் என்பதால் திரு. ஜெயக்குமார் அவர்களிடம் எனது பில் பற்றி கேட்டுப்பார்க்கலாம் என்று முடிவு செய்து திரு. ஜெயக்குமாரை பார்க்க சென்றபோது அவர் தேவியாக்குறிச்சி மகாமாரியம்மன்கோயில் கும்பாபிஷேக வேலைகளில் இருந்ததால் அவரை உடனடியாக சந்திக்க முடியவில்லை. அதன் பிறகு 10.09.2022 ஆம் தேதியன்று காலை சுமார் 11.30 மணியளவில் தேவியாக்குறிச்சி பஞ்சாயத்து அலுவலகத்திற்குச் சென்றபோது அலுவலகத்தில் பஞ்சாயத்து செயலாளர் திரு. சின்னசாமி, பஞ்சாயத்து தலைவியின் கணவர் திரு. ஜெயக்குமார் ஆகியோர் இருந்தனர். நான் சென்ற சிறிது நேரத்தில் பஞ்சாயத்து தலைவியின் கணவர் திரு. ஜெயக்குமார் என்னை அலுவலகத்தில் உள்ள பஞ்சாயத்து தலைவியின் அறைக்கு அழைத்துச் சென்று என்னிடம் எதற்காக வந்துள்ளாய் என்று கேட்டார். அதற்கு நான் ஏற்கனவே செய்து முடித்துள்ள ரூ.5,08,000/– மதிப்புள்ள மூன்று வேலைகளுக்கு பில் சேங்சன் ஆகாமல் உள்ள விவரத்தை சொன்னேன். அதற்கு அவர் மேற்படி வேலைகளுக்குரிய பில்களை தயார் செய்து தனது மனைவி அமுதாவிடம் கையொப்பம் பெற்று தொகையை ரிலீஸ் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும் என்றால் ஏற்கனவே பஞ்சாயத்து செயலர் சொல்லியிருந்தவாறு ரூ.60,000/– த்தை தனியாக கொடுக்கவேண்டும் என்றும் தெரிவித்தார். அதற்கு நான் தொகை ரூ.60,000/– அதிகமாக உள்ளது என்றும் தற்பொழுது ரொம்ப கஷ்டமாக உள்ளது என்றும், எனவே தொகையை கொஞ்சம் குறைத்துக் கொள்ளுமாறும் தெரிவித்தேன். அதற்கு அவர் முதலில் மறுத்து விட்டு, மீண்டும் நான் கொஞ்சம் குறைத்துக் கூறும்படி சற்று கெஞ்சியவாறு கேட்டபோது சரி ரூ.5,000/– த்தை குறைத்துக் கொண்டு ரூ.55,000/– த்தை கொடுத்து விடுமாறும் கூறிவிட்டு மேற்படி அறையை விட்டு வெளியில் வந்து அறைக்கு வெளியில் இருந்த பஞ்சாயத்து செயலர் திரு. சின்னசாமியிடம் இவரிடம் ரூ.55,000/– த்தை வாங்கிக் கொண்டு இவரின் வேலைகளுக்குரிய பில்களை ரெடி பன்னுமாறு கூறிவிட்டு அங்கிருந்து சென்று விட்டார். அப்போது நானும் அங்கிருந்து வந்து விட்டேன். அதன் பிறகு 12.09.2022 ஆம் தேதி திங்கள் கிழமை மாலை வரை எனது பில் பற்றி எந்த ஒரு தகவலும் இல்லாமல் இருந்தது. நான் 13.09.2022 ஆம் தேதியன்று காலை சுமார் 7.00 மணியளவில்

தேவியாக்குறிச்சி அய்யனார் கோயில் அருகில் திரு. ஜெயக்குமார் அவர்களை சந்தித்தபோது எனது வேலைக்குரிய பில் இதுவரை போடாமல் உள்ளது என்று தெரிவித்தேன். அதற்கு திரு. ஜெயக்குமார் அவர்கள் தான் ஏற்கனவே சொன்னது போல் ரூ.55,000/– த்தை பஞ்சாயத்து செயலரிடம் கொடுத்து விடு என்றும், தான் பில் போடச்சொல்லி விடுவதாகவும் என்னிடம் தெரிவித்துவிட்டு அங்கிருந்து சென்று விட்டார். பஞ்சாயத்து செயலர் திரு. சின்னசாமி மற்றும் பஞ்சாயத்து தலைவியின் கணவர் திரு. ஜெயக்குமார் ஆகியோர் கேட்டவாறு பணம் ரூ.55,000/– த்தை உடனே என்னால் ரெடிபன்னமுடியாததால் இரண்டு நாட்கள் காலதாமதம் ஆகிவிட்டது. இன்றுதான் எனக்கு அந்த தொகை கிடைத்தது. நான் அவர்கள் கேட்ட ரூ.55,000/– த்துடன் அவர்களை சந்திக்க உள்ளேன். எனவே பஞ்சாயத்து செயலாளர் திரு. சின்னசாமி மற்றும் பஞ்சாயத்து தலைவி திருமதி. அமுதாவின் கணவர் திரு. ஜெயக்குமார் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Signed XXXX (செந்தில்குமார்)

Sir, Received the above computer typed complaint on 15.09.2022 at 06.30 hrs, the genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Salem Vigilance and Anti Corruption Cr. No. 12/AC/2022 u/s 7(A) and 7(a)of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 today on 15.09.2022 at 08.30 hrs and took up for investigation. Sd xxxx (N.K. R-AVICHANDRAN) 15.09.2022, Inspector of Police, V & AC, Salem.

Original FIR along with original computer typed complaint of M. Senthilkumar, S/o Meyyan is submitted to the Hon'ble Special Judge, Special court for Trail of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

15/9/22

(N.K.RAVICHANDRAN),
INSPECTOR OF POLICE,
V&AC, SALEM.